சின்னச் சின்னதாய்...

மத்திய அரசை கண்டித்து வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்

● திருச்சி

மத்திய அரசு, 3 புதிய குற்றவியல் சட்டங்களை ஜூலை 1–ம் தேதி முதல் அமல்படுத்தும் முடிவைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியும் மற்றும் மத்திய அரசைக் கண்டித்தும் திருச்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன்பு நேற்று பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கத்தினர் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருச்சிராப்பள்ளி வழக்கறிஞர்கள் ஒற்றுமை மேடை ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தின் திருச்சி மாவட்ட நிர்வாகி ரங்கராஜன் தலைமை வகித்தார். மூத்த வழக்கறிஞர்கள் பானுமதி, கென்னடி, அலெக்ஸ், கமருதீன் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கம், இந்திய வழக்கறிஞர்கள் சங்கம், சமத்துவ வழக்கறிஞர்கள் சங்கம், தமிழ்நாடு முற்போக்கு பெண் வழக்கறிஞர்கள் சங்கம், மக்கள் உரிமை பாதுகாப்பு மையம், குடிமக்கள் உரிமைகள் பொதுமன்றம் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் அணியினர் உள்ளிட்டோர் பங்கேற்று கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

பெங்களூருவில் நடைபெற்ற கல்விக் கருத்தரங்கில் புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி முதல்வர் தங்கம் மூர்த்திக்கு விருது வழங்கிய தேசிய பல்கலைக்கழகப் பேராசிரியர் கேப்டன் நாகராஜ் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரித்திகா ஆகியோர்.

புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பள்ளி முதல்வருக்கு பெங்களூருவில் விருது

● புதுக்கோட்டை

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வருக்கு, பெங்களூருவில் அண்மையில் நடைபெற்ற கல்வியாளர்கள் கருத்தரங்கில் விருது வழங்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் பல்வேறு மாநிலங்களில் இருந்து கல்வியாளர்கள் திரளானோர் பங்கேற்றனர். அப்போது, எதிர்காலத்தில் கல்வி சந்திக்கவிருக்கும் சவால்கள், செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவை வகுப்பறையில் பயன்படுத்துவது, விளையாட்டுத் துறையில் மாணவர்களை வளர்ப்பது, மகிழ்ச்சியான வகுப்பறைகளை உருவாக்குவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில், 35 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவங்களுடன் கல்விப் பணியாற்றி வருவதற்காக சிறந்த முதல்வருக்கான விருது, புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்திக்கு வழங்கப்பட்டது. இவ்விருதை தேசிய பல்கலைக்கழகப் பேராசிரியர் கேப்டன் நாகராஜ் மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரித்திகா ஆகியோர் வழங்கினர்.

கவிஞர் தங்கம் மூர்த்தி ஏற்கெனவே தமிழக அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது, மத்திய அரசின் தேசிய நல்லாசிரியர் விருது பெற்றுள்ளார். பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் கல்விக் கருத்தரங்கில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று வருகிறார். மேலும், பள்ளியில் இணைப் பாடத்திட்டத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக கடந்த ஆண்டு சண்டிகர் பல்கலைக்கழகம் இவருக்கு விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

அரிமளம் அருகேயுள்ள கடையக்குடியில்

10 ஏக்கரில் சமத்துவபுரம் கட்ட ரூ.6.20 கோடி நிதி ஒதுக்கீடு

● புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் அருகேயுள்ள கடையக்குடியில், 10 ஏக்கரில் 100 வீடுகளுடன் பெரியார் நினைவு சமத்துவபுரம் கட்ட ரூ.6.20 கோடி நிதியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

தமிழகத்தில் முதன் முதலாக மதுரை மாவட்டத்தில் 1998-ல் சமத்துவபுரம் உருவாக்கப்பட்டது. இதேபோல், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்கெனவே பல்வேறு பகுதிகளில் சமத்துவபுரங்கள் உள்ளன.

இந்நிலையில், அரிமளம் ஒன்றியத்துக்கு உட்பட்ட பகுதியில் சமத்துவபுரம் அமைக்க வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, கடையக்குடி கிராமத்தில் சமத்துவபுரம் கட்ட 10 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது.

100 வீடுகளைக் கொண்ட சமத்துவபுரம் கட்ட ரூ.6.20 கோடியை தமிழக அரசு ஒதுக்கி உள்ளது. தொடர்ந்து, சமத்துவபுரம் கட்டுமானப் பணியை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி முகமை மூலம் டெண்டர் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து அரிமளம் ஒன்றியக் குழுத் தலைவர் மேகலா முத்து கூறியது:

அரிமளம் ஒன்றியத்தில் பெரியார் நினைவு சமத்துவபுரம் கட்ட கடையக்குடியில் வடக்கு நல்லிப்பட்டி பகுதியில் சாலையோரத்தில் 10 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணி தொடங்கும் என்றார்.

திருச்சி காவிரி ஆற்றில் 2 முதலைகள்

வனத் துறையினர் எச்சரிக்கை

● திருச்சி

திருச்சி காவிரி ஆற்றில் 2 முதலைகள் இருப்பதால் மக்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி பொதுமக்களை வனத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

திருச்சி மேலச் சிந்தாமணி படித்துறை அருகே காவிரி ஆற்றில் முதலைகள் நடமாட்டம் இருப்பதாக அப்பகுதி மக்கள் வனத் துறையினருக்கு நேற்று தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து, வனச் சரக அலுவலர் கோபிநாத் தலைமையிலான வனக் குழுவினர் அங்கு சென்று ட்ரோன் உதவியுடன் முதலைகள் நடமாட்டத்தை கண்காணித்தனர். சுமார் 2 மணி நேர தேடுதலுக்குப் பிறகு முதலை நடமாட்டம் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

திருச்சி மேல சிந்தாமணி காவிரி கரையில் காணப்பட்ட முதலை.

இதுகுறித்து வனச் சரக அலுவலர் கோபிநாத் 'இந்து தமிழ்' நாளிதழிடம் கூறியது:

காவிரி ஆற்றில் 2 முதலைகள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவை தண்ணீரை விட்டு வெளியே வந்தால் மட்டுமே கூண்டு, வலை வைத்து பிடிக்க ஏதுவாக இருக்கும். எனவே, சிந்தாமணி பகுதியில் உள்ள காவிரி கரையோர பகுதிகளில் பொதுமக்கள் யாரும் ஆற்றில் இறங்க வேண்டாம் என எச்சரித்துள்ளோம் என்றார்.

திருச்சி பாஜக அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற தேசிய அவசர நிலை பிரகடனம் குறித்த கருத்தரங்கில் பேசிய பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜா. உடன், மாநகர் மாவட்டத் தலைவர் எஸ்.ராஜசேகரன் உள்ளிட்டோர். படம்: ர.செல்வமுத்துகுமார்

கள்ளச் சாராய உயிரிழப்பு சம்பவத்தில்

திமுக பாடம் கற்றுக் கொள்வது நல்லது

ஹெச்.ராஜா கருத்து

● திருச்சி

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது அமல்படுத்தப்பட்ட அவசர நிலை பிரகடனம் குறித்த விளக்க கருத்தரங்கம், திருச்சி புத்தூர் வண்ணாரப்பேட்டையில் உள்ள பாஜக அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

மாநகர் மாவட்டத் தலைவர் ராஜசேகரன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக பாஜக மூத்த தலைவர் ஹெச்.ராஜா கலந்து கொண்டு பேசினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

நாட்டில் நெருக்கடி நிலை (எமர்ஜென்சி) அறிவிக்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆகிறது. மீண்டும் இதுபோன்ற நிலை வரக் கூடாது என்பதற்காக இந்த கருப்பு தினத்தை பற்றி ஆண்டு தோறும் மக்களுக்கு நினைவு படுத்துகிறோம்.

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் அரசு நிர்வாகம் தவறுகளை மூடி மறைக்க முயற்சிக்கிறது. இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணை வேண்டும் என்பதை முதல்வர் ஏற்றுக்கொள்வது அவருக்கு நல்லது. தமிழகத்தில் ஆட்சியை கலைக்க கள்ளக்குறிச்சி விவகாரத்தை அரசியல் ஆயுதமாக பயன்படுத்த பாஜக விரும்பாது. ஆனால், இந்த விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையில் விவாதிக்க முதல்வருக்கு பயம் உள்ளது. கள்ளக்குறிச்சி சம்பவத்தில் இருந்து திமுக பாடம் கற்றுக் கொள்வது நல்லது.

இலவசங்களுக்கு எதிராக டிவியை உடைத்த நடிகர் கமல் ஹாசன் தற்போது டார்ச் லைட்டை தொலைத்துவிட்டு திரிகிறார். அரசியலுக்கு தகுதியற்ற அவருக்கு வெளிச்சம் போட்டு காட்ட வேண்டியது இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

இரு வேறு இடங்களில் தனியார் பேருந்துகள் கவிழ்ந்து 55 பேர் காயம்

● புதுக்கோட்டை

புதுக்கோட்டையில் இருந்து திருச்சி மாவட்டம் மணப்பாறைக்கு தனியார் பேருந்து புறப்பட்டது. இலுப்பூர் அருகேயுள்ள ஆரியக்கோன்பட்டியைச் சேர்ந்த பி.யுவராஜ்(27) பேருந்தை ஓட்டினார். அன்னவாசல் கடைவீதி பகுதியில் சென்றபோது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை மீறி சாலையில் பேருந்து கவிழ்ந்தது. பேருந்தில் இருந்த 50-க்கும் அதிகமான பயணிகளால் உடனே வெளியேற முடியவில்லை. அப்பகுதியில் இருந்த பொதுமக்கள், பேருந்தின் கண்ணாடி, ஜன்னல்களை உடைத்து உள்ளே சிக்கி இருந்தவர்களை மீட்டனர். இந்த விபத்தில் இலுப்பூர் அருகேயுள்ள முட்டுத் தெருவைச் சேர்ந்த ஆயுதப் படை காவலர் எம்.பிரியா(24), கீழக்குறிச்சி எம்.மீனாட்சி(55), அன்னவாசல் என்.கலைச்செல்வன்(48), திருச்சி மாவட்டம் மருங்காபுரி என்.சுப்பிரமணியன்(60) உட்பட 50-க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இதில், 26 பேர் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதுகுறித்து அன்னவாசல் போலீஸார் விசாரிக்கின்றனர்.

இதேபோல, ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் இருந்து திருப்புனவாசல், ஆவுடையார்கோவில் வழியாக அறந்தாங்கிக்கு தனியார் பேருந்து நேற்று புறப்பட்டது.

ஆவுடையார்கோவில் அருகே தியத்தூர் பகுதியில் சென்றபோது, எதிரே வந்த வாகனத்துக்கு வழிவிட முயன்றபோது சாலையோர பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்தது. இந்த விபத்தில் காயமடைந்த 5 பேர் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்து குறித்து திருப்புனவாசல் போலீஸார் விசாரிக்கின்றனர்.

பொது அறிவிப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்டம்-620013, திருவெறும்பூர், கூத்தைப்பார் ரோடு, 3-வது தெரு விஸ்தரிப்பு, வ.உ.சி. நகர், பிளாட் நெ.31 என்ற முகவரியில் வசித்துவரும் திரு.P.அசோகன் அவர்களின் மனைவி A.சித்ரா மற்றும் திரு.P.அசோகன் அவர்களின் குமாரர் A.சிந்தன் குமார் அவர்களின் சார்பாக கொடுக்கப்படும் பொதுஅறிவிப்பு:

திருமதி. M.லீலா, க/பெ. திரு.M.மதியழகன் மற்றும் திரு.M.மதியழகன் த/பெ. திரு. மருதையா கண்டியர் அவர்களுக்கு கிரையம் மூலமாக கடந்த 10.03.1997-ம் நேதியிட்ட 621/1997-ல் ஆவணமாக திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டு, பாத்தியப்பட்ட சொத்து விவரத்தில் கண்ட சொத்தான திருவெறும்பூர் கிராமம், IAS Nagar, சர்வே என்.47/9-க்கு தற்போதைய சப்டிவிஷன் சர்வே என்.47/9B-ல் கட்டுப்பட்ட மனை என்.20-க்கு 2187 1/2 சதுரடி உள்ள மனையை மேற்படி திருமதி. A.சித்ரா மற்றும் திரு. A. சிந்தன்குமார் அவர்கள் கிரையம் பெற அருப்பதால் மேற்படி சொத்தை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணைஇருப்பின் அதை இந்த விளம்பரம் கண்ட பதினைந்து தினங்களுக்குள் எனது முகவரிக்கோ அல்லது மேற்படி திருமதி.A.சித்ரா மற்றும் திரு.A. சிந்தன்குமார் அவர்களின் முகவரிக்கோ தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பின்னிட்டு தெரிவிக்கப்படும் எந்த ஒரு தகவலும் எனது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொத்து விபரம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலகம், திருவெறும்பூர் கிராமம், சர்வே என்.47/9- க்கு ஏக்.2.38 சென்ட் உள்ள நிலத்தை மனைகளாக பிரித்து "IAS NAGAR" எனப் பெயரிடப்பட்டுள்ளதில் மனை என்.20-க்கு 2187 1/2 சதுரடி உள்ள மனை இதற்கு தற்போதைய சப்டிவிஷன் சர்வே என்.47/9B மற்றும் பாதை பாத்தியங்கள் உள்பட இதற்கு கட்டுப்பட்டது.

ADVOCATE R.SRINIVASAN B.Sc., BL.,
NO.4, 1ST FLOOR, THAMARAI SALAI, ANNAMALAINAGAR, TRICHY-620 018.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

மனித வள மேலாண்மைத் துறை, விளையாட்டுப் பிரிவு

முதல் தளம், மத்திய அலுவலகம், 763, அண்ணா சாலை, சென்னை-600 002,
Ph: 044-2888 9326 / 2851 9682

விளையாட்டு வீர்களுக்கான உடற்பயிற்சிக் கூட வசதிகள்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தனது விளையாட்டு வீர்களுக்கு (ஏறத்தாழ 36 உறுப்பினர்கள்) **உடற்பயிற்சி மற்றும் உடல் ஆரோக்கிய பயிற்சி வசதிகளை** ஆகஸ்ட் 2024 முதல் ஜூலை 2025 வரை **ஒரு வருட காலத்திற்கு வழங்குவதற்காக,** சென்னை நகரில் குறைந்தபட்சம் 3 கிளைகளுடன் இயங்கும் ஜிம் / ஃபிட்னஸ் மையங்களிலிருந்து விலைப்புள்ளிகளை வரவேற்கிறது. விண்ணப்ப படிவங்களை எங்கள் வங்கியின் வலைதளத்திலிருந்து (www.iob.in → Tenders → GYM FACILITIES) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் அல்லது மேலே உள்ள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **19.07.2024 அன்று 17:00 மணிக்குள் அல்லது அதற்கு முன்னதாக** மேலே உள்ள முகவரியில், முதன்மை மேலாளர் வசம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

எந்தவொரு காரணத்தையும் கூறாமல் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

தேதி: 26.06.2024 **துணை பொது மேலாளர்**

ரானே பிரேக் லைனிங் லிமிடெட்

CIN: L63011TN2004PLC054948
பதிவு அலுவலகம்: "மைத்ரி",எண்.132, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086. Tel.: 044 2811 2472 / 73
Website: www.ranegroup.com | E-mail: investorservices@ranegroup.com

பொது அறிவிப்பு - 19-வது வருடாந்திரப் பொதுக் கூட்டம்

இதன் மூலம் கொடுக்கப்படும் அறிவிப்பு என்னவென்றால், ரானே பிரேக் லைனிங் லிமிடெட் ("நிறுவனத்தின்") உறுப்பினர்களின் **19-வது வருடாந்திரப் பொதுக் கூட்டம் (AGM) 2024 ஜூலை 22 திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு** வீடியோ கான்பரன்ஸ் / பிற ஆடியோ விஷுவல் மூலம் நடைபெறும்.

பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் ("MCA") 2023 செப்டம்பர் 25 தேதியிட்ட அதன் சுற்றறிக்கையை இது தொடர்பாக முந்தைய சுற்றறிக்கைகளுடன் படிக்கையில், (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படுகிறது) வீடியோ கான்பரன்ஸ் / பிற ஆடியோ விஷுவல் மூலம் வருடாந்திரப் பொதுக் கூட்டத்தை நடத்த அனுமதித்துள்ளது மற்றும் செக்யூரிட்டீஸ் & எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா ("SEBI") அதன் 2023 அக்டோபர் 07 தேதியிட்ட சுற்றறிக்கையின்படி வருடாந்திர அறிக்கையின் கடின நகலை அனுப்புவதற்கு தளர்வு அளித்துள்ளது (ஒட்டுமொத்தமாக "பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள்" என குறிப்பிடப்படுகிறது). அதன்படி நிறுவனத்தின் 19வது வருடாந்திர பொதுக்குழு கூட்டமானது, VC/OAVM மூலம் கூட்டப்படும் மற்றும் வணிகமானது பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") விதிகளுக்கு இணங்க மின்னணு முறையில் வாக்களிப்பதன் மூலம் பரிவர்த்தனை செய்யப்படும். **கட்-ஆஃப் தேதி, அதாவது 2024 ஜூலை 15 திங்கட்கிழமை அன்று,** உறுப்பினர்களின் பதிவேட்டிலோ அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டிலோ ஒரு நபர் பதிவு செய்யப்பட்டிருந்தால் மட்டுமே 'ரிமோட் மின்-வாக்களிப்பு' அல்லது வாக்களிப்பினை, வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் செலுத்துவதற்கு தகுதியுடையவர் ஆவார். வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் வாக்களிப்பது அல்லது வாக்களிக்கும் வசதிக்காக நிறுவனமானது மத்திய டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் (CDSL) நிறுவனத்தினை அணுகி மின்னணு வழிகளில் வாக்களிக்க வசதியாக, அதாவது ரிமோட் மின்-வாக்களிப்பு மற்றும் AGM தேதியில் வாக்களிப்பதற்கான சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகள் மற்றும் சட்டத்தின் பிரிவு 108, நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 மற்றும் SEBI LODRன் படி, நிதியாண்டு 2023-24க்கான வருடாந்திர அறிக்கை மற்றும் 19வது AGMன் அறிவிப்பினை நிறுவனம் / பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் அல்லது டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் மின்னஞ்சல் முகவரி பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் அனுப்பப்படுகிறது. மேலே உள்ள ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான www.ranegroup.com என்ற இணையதளத்திலும், BSE லிமிடெட் இணையதளமான www.bseindia.com, தேசிய பங்குச் சந்தை இந்தியா லிமிடெட் இணையதளம் www.nseindia.com மற்றும் CDSL இணையதளம் https://www.evotingindia.com மூலம் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால்:

(i) "தொலை மின்னணு வாக்களிப்பு" காலம் **2024 ஜூலை 19, வெள்ளிக்கிழமை அன்று (காலை 9:00 மணி) முதல் 2024 ஜூலை 21, ஞாயிற்றுக்கிழமை அன்று (மாலை 5.00 மணி) வரை.** உறுப்பினர்களின் குறிப்பிற்கு மேற்கூறிய காலத்திற்கு பிறகு மின்-வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

(ii) இந்த காலகட்டத்தில், வரம்புத் தேதி **2024 ஜூலை 15, திங்கட்கிழமை அன்று** இருக்கும் அங்கத்தினர்கள் மற்றும் புதிய பங்குதாரர்கள் பிசிகல் வடிவம் அல்லது டிமடீரியல் வடிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் CDSL மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

(iii) தொலை மின்-வாக்களிப்பு மூலம் வாக்களித்த அங்கத்தினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கு பெறலாம் ஆனால் அவர்கள் மறுபடியும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் நடைபெறும் வாக்களிப்பில் வாக்களிக்க இயலாது.

(iv) உறுப்பினர்கள் CDSL மின்னணு வாக்களிப்பு முறைக்கான இணைய இணைப்பு : https://www.evotingindia.com-ல் shareholders/members loginனை இயக்கலாம். AGMல் இணைவதற்கும் அதே லிங்க் செல்லுபடியாகும். ரிமோட் மின்-வாக்களிப்பு செயல்முறை, AGMல் இணைவது மற்றும் AGMஇன் போது மின்-வாக்குப்பதிவு பற்றிய விரிவான வழிமுறைகள் AGM அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(v) டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகள் பதிவுசெய்யப்படாத உறுப்பினர்கள் மின் வாக்களிப்பதற்கான உள்நுழைவு சான்றுகளைப் பெறுவதற்கு வருடாந்திரப் பொதுக் கூட்ட அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி தேவையான விவரங்களையும் ஆவணங்களையும் நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி investorservices@ranegroup.com அல்லது RTA மின்னஞ்சல் முகவரி srirams@integratedindia.in அனுப்புமாறு கோரப்படுகிறது.

(vi) திரு. பாலு ஸ்ரீதர், பயிற்சி நிறுவன செயலாளர் (ICSI உறுப்பினர் எண். FCS 5869), தொழில் கூட்டாளி, M/s. A.K. ஜெயின் & அசோசியேட்ஸ், நிறுவன செயலாளர்கள், 'ரிமோட் மின்-வாக்களிப்பு' செயல்முறை மற்றும் AGMல் வாக்களிப்பதை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்பவராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(vii) உறுப்பினர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ஈவுத்தொகைகளைப் பெறுவதற்கான ஆணையை மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் அந்தந்த வைப்புத்தொகை பங்கேற்பாளர்கள் (டிமேட் வைத்திருப்பவர்களுக்கு) / RTA அல்லது நிறுவனம் (பிசிகல் ஹோல்டிங் வைத்திருப்பவர்கள்) வரம்பு தேதி 2024 ஜூலை 15, திங்கட்கிழமை அல்லது அதற்கு முன் புதுப்பிக்கலாம். வருமான வரிச் சட்டம், 1961ன்படி, பொருந்தக்கூடிய இடங்களில் டி.டி.எஸ் கழிக்கப்படும்.

(viii) தங்கள் கேள்விசி விவரங்களைப் புதுப்பிக்காத பங்குதாரர்கள் மின்னஞ்சல் மற்றும் பிற கேள்விசி விவரங்களைத் தங்கள் டெபாசிட்டரிகளுடன் (டிமேட் ஹோல்டிங்கிற்காக) அல்லது நிறுவனம் / RTA (பிசிகல் ஹோல்டிங்கிற்காக) பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருடாந்திர பொதுக் கூட்டத்தின் போது தொலைநிலை மின்-வாக்களிப்பு / மின்-வாக்களிப்பு தொடர்பான ஏதேனும் வினவல் / தெளிவுபடுத்துதல் அல்லது சிக்கல்களுக்கு www.evotingindia.com என்ற இணையதளத்தில் Help பகுதியின் கீழ் அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள் (FAQ's) மற்றும் மின்-வாக்களிப்பு கையேடு காணலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சலுக்கு எழுதவும் அல்லது திரு. ராகேஷ் தலவி (முதத் மேலாளர், CDSL)-யை 1800 22 55 33 என்ற கட்டணமில்லா எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

(இயக்குனர் குழு உத்தரவுப்படி)
ரானே பிரேக் லைனிங் லிமிடெடுக்காக
வெங்கட்ராமன்
நிறுவன செயலாளர்

இடம் : சென்னை
தேதி : ஜூன் 26, 2024

நகரில் நடப்பவை

திருச்சி

- ஏழை குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா: தலைமை மருத்துவர் தமிழ்ச்செல்வி, சிறப்பு விருந்தினர்கள்- மருத்துவர்கள் கவிதா செந்தில், கவுரி வேணுகோபால், சி.இ. மேல்நிலைப் பள்ளி, வண்ணாரப்பேட்டை, பிற்பகல் 3.
- சர்வதேச போதை எதிர்ப்பு தின விழிப்புணர்வு பேரணி: புனித சிலுவைக் கல்லூரி மற்றும் சாக்சீடு அமைப்பு, பேரணியைத் தொடங்கி வைப்பவர்- மாநகர காவல் ஆணையர் என்.காமினி, பழைய குட்ஷெட் ரோடு சாக்சீடு அலுவலகம், காலை 10.30.
- போதை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி: ஜமால் முகமது கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம், தலைமை- கல்லூரி முதல்வர் ஜார்ஜ் அமலரத்தினம், மத்திய பேருந்து நிலையம், மாலை 5.

புதுக்கோட்டை

- வாசிப்போர் மன்றம்: சிறார் எழுத்தாளர் விழியன் நூல்கள் வாசிப்பு, தலைமை- கவிஞர் தங்கம் மூரத்தி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருக்கோகர்ணம், புதுக்கோட்டை, காலை 10.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரதம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமப்பமையில் செய்யப்படுமன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் பொன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாள் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட் (ஒரு அட்டவணை வர்த்தக வங்கி)
பதிவு அலுவலகம்: 19-ஏ, துலேஸவர் கார்டன், அஜ்மீர் சாலை, ஜெய்பூர்-302001. (CIN:L36911RJ1996PLC011381)

திருத்தம்

இந்த நாளிதழில் 25.06.2024 அன்று வெளியான "கவாதீனம் அறிவிப்பு" தொடர்பான கடன் கணக்கு எண். 22660000765141 அறிவிப்பில் கடன்தாரர்/ இணை-கடன் தாரர்/அடமானதாரர்/ஜாமீன்தாரர் பெயர் "திரு./திருமதி. ஜாதிலட்சுமி மாரிமுத்து" என்பதற்கு பதிலாக **"திரு./திருமதி. J. ஆதிலட்சுமி மாரிமுத்து"** என்று திருத்தி வாசிக்கவும். மற்ற அனைத்து விவரங்களிலும் எவ்வித மாற்றமும் இல்லை.

நாள் : 26.06.2024, **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
இடம் : புதுக்கோட்டை **AU ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்**

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம்
மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு. மொத்த தொகை ஒப்பந்த முறை (இரு உறை முறை)

மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்: 03/ 2024- 2025 / க.பொ / க (கு&ப) வட்டம் / சேலம்/ நாள்: 24.06.2024

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம் -7 அவர்களால் பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிக்கு இணைய வழி மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறை முறையில் வரவேற்கப்படுகின்றன. மின்னணு ஒப்பந்தப்புள்ளியை "https://tntenders.gov.in" என்ற இணையதளத்தில் 01.07.2024 பிற்பகல் 3.00 மணி முதல் 31